

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 22.12.2025

# ததும்பி வழியும் தமிழ்ப் பெருமிதம்!

**கீழடியைத் தமிழர்களின் தாய்மடி என்று சொன்ன மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பொருநையைத் தமிழர்களின் பெருமை என்று அடையாளப்படுத்தி இருக்கிறார்.**

நேற்றைய தினம் திருநெல்வேலியில் திறந்து வைக்கப்பட்ட பொருநை அருங்காட்சியகம், தமிழர்களின் கடந்த காலத்தைப் பேசுவது மட்டுமல்ல, காலங்கள் கடந்தும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பெயரை நின்று நிலைநிறுத்தப் போகும் இடமாகும்.

தஞ்சை பெரியகோவில், மாமல்லபுரம், வள்ளுவர் கோட்டம் என்ற வரிசையில் இது போற்றத்தக்கதாக அமையப் போகிறது. ஏற்கனவே கீழடி அருங்காட்சியகம் அமைத்த முதலமைச்சர், இப்போது பொருநை அருங்காட்சியகத்தை அமைத்துள்ளார்.

ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, துலுக்கர்பட்டி ஆகிய தொல்லியல்தளங்களில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் அண்மைக் காலத்தில் அறிவியல் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட அரிய தொல்பொருட்கள் அனைத்தையும் கொண்ட கண்காட்சியாக இது அமைக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி அருகே 13 ஏக்கர் நிலப்பரப்பில் 54,296 சதுர அடி பரப்பளவில் இது விரிந்து பரந்துள்ளது. இதனை ஒருவர் முழுமையாகப் பார்த்து வெளியில் வர பல மணி நேரம் ஆகும். வெளியில் வந்தாலும் அவர்களது மனக்கண்ணில் பொருநை நதியும் நாகரிகமும், பண்பாடும் ஓடிக் கொண்டே இருக்கும்.

**“இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு, இனி தமிழ் நிலப்பரப்பில் இருந்து தான் தொடங்கி எழுதப்பட வேண்டும். இதனை சான்றுகளின் அடிப்படையில் அறிவியல் பூர்வமாக நிறுவுவதே தமிழ்நாடு அரசின் தலையாய கடமை”** என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து சொல்லி வருகிறார்கள். அவை வெறும் வாய்ச்சொல் அல்ல என்பதன் அடையாளம்தான் பொருநை அருங்காட்சியகம்.

18.5.2023 ஆம் நாள் அடிக்கல் நாட்டப்பட்டு 20.12.2025 அன்று திறப்பு விழா கண்டுவிட்டது பொருநை அருங்காட்சி யகம். மதுரை எய்ம்ஸ் மாதிரி ஏமாற்றத்தின் அடையாளம் அல்ல இது. சொன்னால், சொன்னதைச் செய்வோம், அதுவும் உடனே செய்வோம் என்பதை முதலமைச்சர் அவர்கள் மெய்ப்பித்து உள்ளார்.

**கண்டுபிடிப்புகள் காலங்கள் தோறும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. கண்டுபிடிக்கப்பட்ட பெருமைகள் அனைத்தும் கோப்புகளில் முடங்கியது. அல்லது தொல்லியல் ஆய்வாளர்களின் கட்டுரைகளுக்குள் கரைந்தது. அவ்வப்போது ஒரு சில சொற்களாக அவை மேடைகளில் முழங்கப்படும் அவ்வளவுதான். மற்றபடி அனைத்தும் யாரும் பார்க்க முடியாத, பார்க்கக் கூடாத, பார்க்கக் கிடைக்காத அரியவைகளாக மீண்டும் கரையான்களால் அழிந்து போகும். இவை சிலரால் கவனிப்பாரற்றும் போகக் கூடும். கவனிக்கக் கூடாது என்றும் தடுக்கப்பட்டு வந்துள்ளது. அதனை மாற்றி, பெருமைக்குரியவை அனைத்தையும் பெருமைப்படும் அளவுக்கு படையலாகக் காட்சிப் படுத்தியதுதான் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனை ஆகும். மாண்புமிகு முதலமைச்சருக்கு தமிழ், தமிழின, தமிழ்நாட்டுப் பற்றின் வெளிப்பாடு இது.**

தமிழ்நாட்டில் இரும்பின் தொன்மையைப் பறைசாற்றிய சிவகளை, தமிழ்ப்பண்பாட்டின் தொட்டிலாகக் கருதப்படும் ஆதிச்சநல்லூர், சங்ககாலபாண்டியரின் துறைமுகமான

கொற்கை ஆகிய இடங்களில் கிடைத்த அரிய தொல்பொருட்களை ஒரே இடத்தில் பொருநை ஆற்றங்கரை நாகரிகம் என்ற கருப்பொருளின் அடிப்படையில் நவீன அறிவியல் தொழில்நுட்பங்களுடன் சிறப்பாக தொல் பொருட் களை காட்சிப்படுத்தி நவீன வசதிகளோடு அமைக்கப் பட்டுள்ளது. தென் பகுதியின் கட்டடக் கலையை நினைவூட்டும் வகையில் இதனைக் கட்டி இருக்கிறார்கள்.

**★ சிவகளையில் ஈமத்தாழிகள் கிடைத்துள்ளன. ஈமத்தாழி ஒன்றில் சேகரிக்கப்பட்ட உமி நீங்கிய நெல்மணிகள் இருந்தது. 3,200 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் நெல் பயிரிட்டு இருக்கிறார்கள் என்பதைச் சொல்கிறது சிவகளை.**

**★ இரும்புக் காலத்துக்கு முன்னும் பின்னும் வாழ்ந்த மக்களின் வரலாற்றை ஆதிச்சநல்லூர் சொல்கிறது. கற்காலத்தைச் சேர்ந்த நுண் கருவிகள் கிடைத்துள்ளது. இவை இரும்புக் காலத்துக்கு முந்தைய காலத்தை அடையாளப்படுத்துகிறது. தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன. நீர் மேலாண்மை நடந்துள்ளது. வெண்கலம், தங்கப் பொருட்கள் கிடைத்துள்ளன.**

**★ துலுக்கர்பட்டியில் வெள்ளி முத்திரையிடப்பட்ட நாணயம், தந்தத்தினால் ஆன பொருட்கள், கண்ணாடி மணிகள் கிடைத்துள்ளன. தமிழி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும் இங்கு கிடைக்கப்பெற்றுள்ளன.**

**★ கொற்கை என்பது பாண்டியர் காலத்து துறைமுகம். இலக்கியங்களில் சொல்லப்பட்ட அனைத்துக்கும் ஆதாரங்கள் கிடைத்துள்ளன.**

இவை அனைத்தையும் மொத்தமாக ஒரே இடத்தில் பார்க்கும் வகையில் பொருநை அருங்காட்சியகம் அமைந்துள்ளது. தமிழ் நிலங்களின் தனிச்சிறப்பை உணர்வு பூர்வமாக அனுபவிக்கச் செய்யும் ஓர் பயணமாக, ஐந்திணை கள் ஐந்து பரிமாண வடிவில் (5D) பொதுமக்கள் உவகையுடன் கண்டுகளிக்கும் வகையில் காட்சிப் படுத்தப் பட்டுள்ளன. தொடுதிரை, மெய்நிகர் காட்சிகள், ஒளி-ஒலிநிகழ் படங்கள், ஆவணப் படங்கள், உயிரூட்டுக்காட்சிகள், மாதிரி வடிவங்கள் என இன்றைய நவீன முறைகள் அனைத்தின் மூலமாக பழந்தமிழர் வரலாற்றுப் பெருமை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

‘**ததும்பி வழியும் தமிழ்ப் பெருமிதம்**’ என்று இதனைக் குறிப்பிட்டுள்ளார் நிதித்துறை அமைச்சர், தொல்லியல் துறையின் அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தொல்லியல் துறையின் அமைச்சராக இருந்து ஆதிச்சநல்லூரைப் பார்வையிட்ட அவர், இன்று ஆதிச்சநல்லூரையும் சிவகளையையும், கொற்கையையும் துலுக்கர்பட்டியையும் ஒரே இடத்தில் இன்று உருவாக்கிவிட்டார். பல தலைமுறைகள் கடந்தும் நம் வரலாற்றைச் சொல்லும் இந்த பொருநை அருங்காட்சியகத்தை அமைத்ததில் நிதித்துறை செயலாளர், தொல்லியல் துறை இயக்குநர் உதயசந்திரன் பங்களிப்பு மிகப்பெரியது. முதலமைச்சரின் எண்ணம், சீராக நிறைவேற இவர்கள் நாளும் உழைத்துள்ளார்கள்.

வற்றாத ஜீவ நதி என்று நதிகளைச் சொல்வார்கள். தமிழர் தம் பெருமையும் அத்தகையது தான். அத்தகைய பெருமைகளை ஆய்வுகளின் மூலம் தமிழ்நாடு அரசு மெய்ப்பித்து வருகிறது.

தமிழ்நாட்டுக் குறியீடுகளையும் சிந்துவெளியில் கிடைக்கப் பெற்ற முத்திரைகளையும், குறியீடுகளையும் ஒப்பிட்டு இரண்டிற்கும் இடையிலான ஒற்றுமைகளை அறிந்துகொள்ளும் வகையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த ஆய்வு ‘**சிந்துவெளி வரிவடிவங்களும் தமிழ்நாட்டுக் குறியீடுகளும்**’ என்ற தலைப்பிலான நூலாக வெளியிடப்பட்டது. இந்த நூலில், சிந்துவெளி முத்திரைகளிலுள்ள குறியீடுகளுக்கும் தமிழ் நாட்டுக் குறியீடுகளுக்கும் இடையே 60 சதவீதமும், சிந்து வெளிப் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்ட பானை களிலுள்ள குறியீடுகளுக்கும் தமிழ்நாட்டுக் குறியீடுகளுக்கும் 90 சதவீதமும் வடிவவியல் ஒற்றுமை உள்ளதை இந்த ஆய்வு நூல் வெளிப்படுத்தியுள்ளது. இது தான் மிகமிக முக்கியமானது ஆகும்.

**‘இது ஒரு கட்சியின் அரசல்ல, இனத்தின் அரசு’ என்று முதலமைச்சர் அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்லி வருவதற்கு இவைதான் எடுத்துக் காட்டுகள்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.12,2025) திருநெல்வேலி சுற்றுலா மாளிகையில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநிலப் பொதுச் செயலாளர் கே.ஏ.எம். முகமது அபுபக்கர், மாநில துணை செயலாளர் கோதர் மொய்தீன், திருநெல்வேலி மாவட்டத் தலைவர் எல்.கே.எஸ். மீரான் மொய்தீன், மாவட்டச் செயலாளர் முகமது அலி, மாவட்டப் பொருளாளர் முகமது இலியாஸ், தென்காசி மாவட்டத் தலைவர் அப்துல் அஜிஸ், இளைஞர் மாநில துணைத் தலைவர் நைநார் முகமது கடாட்சம், தொழிற்சங்க மாநிலத் தலைவர் கானகத்தி மீரான் ஆகியோர். திருநெல்வேலியில் ”காயிதே மில்லத் அறிவுலகம் நூலகத்திற்கு அடிக்கல் நாட்டியுள்ளதையொட்டி சந்தித்து, நன்றி தெரிவித்தனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21,12,2025) திருநெல்வேலி சுற்றுலா மாளிகையில், நெல்லை கிழக்கு மாவட்டம். பாளையங்கோட்டை வடக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த 44 கிளைக் கழக செயலாளர்களுக்கு தலா 5 கிராம் மோதிரங்களை அணிவித்தார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் கே.என்.நேரு, மேற்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ம.கிரகாம்பெல், பாளையங்கோட்டை வடக்கு ஒன்றியப் பொறுப்பாளர் வேலன்குளம் எம்.கண்ணன், கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.எம்.கே.மனோஜ்குமார், நாங்குநேரி தொகுதி ஒருங்கிணைப்பாளர் பா.அழகுமுத்து, மாவட்டப் பிரதிநிதி ஆறுமுகம் ஆகியோர் உடனிருந்தனர்.

## பொருநை தாலாட்டும் நெல்லையின்

# நெஞ்சை நிறைக்கும் நலத்திட்டங்களை வெளியிட்டேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!



சென்னை, டிச. 22-

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூகவலைத்தளப் பதிவில், பொருநை தாலாட்டும் நெல்லையின் நெஞ்சை நிறைக்கும் நலத்திட்டங்களை வெளியிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.**

நெல்லை மக்களின் அறிவுப்பசியைத் தீர்க்கவுள்ள கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் பெயரிலான நூலகத்துக்கு அடிக் கல் நாட்டி, பல்வேறு நீர்ப்பாசன கூட்டுக்குடிநீர்த் திட்டங்களையும் தான் அறிவித்துள்ளதாகவும், நெல்லையப்பர் திருக்கோயிலின் வெள்ளித்தேர் வரும் ஜனவரியில் ஓடவுள்ளது என்ற அறிவிப் பையும் மகிழ்ச்சியோடு வெளியிட்டதாக வும் தெரிவித்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கிறிஸ்துமஸ் கொண்டாட்டம், பொருநை அருங்காட்சிய கம் திறப்பு, நலத்திட்ட உதவிகள், புதிய அறி விப்புகள் எனத் தென்னகப் பயணத்தின் இனிய நினைவுகளைச் சுமந்து சென்னை திரும்பியதாகவும் பதிவிட்டுள்ளார்.

## துறைமுகம் தொகுதி – இராயபுரம் மண்டலம் - பேரக்ஸ் தெரு மைதானத்தில்

# ரூ.1.54 கோடியில் புதிய இறகுப் பந்து உள் விளையாட்டரங்கம் - கைப்பந்து ஆடுகளம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு – தயாநிதி மாறன் எம்.பி. திறந்து வைத்தனர்!

சென்னை, டிச.22–

இந்து சமயம் மற்றும் அறநிலை யத் துறை அமைச்சரும், சென் னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவரு மான பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துறை முகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராயபுரம் மண்டலம், பேரக்ஸ் தெரு, மைதானத்தில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 1.54 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட் டப்பட்ட இறகுபந்து உள்விளை யாட்டு அரங்கம், கைப்பந்து ஆடுக ளம் கூடை பந்து ஆடுகளம் மற்றும் புனரமைக் கப்பட்ட மேம்படுத்தப்பட்ட நவீன உடற்பயிற்சி கூடத்தினை பொது மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்க ளின் உத்தரவின்படி, நேற்று முன்தினம் (20.12.2025) இந்து சம யம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமான பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராயபுரம் மண்ட லம், பேரக்ஸ் தெரு, மைதானத்தில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 1.54 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட இறகுபந்து உள் விளையாட்டு அரங்கம், கைப்பந்து ஆடுகளம், கூடை பந்து ஆடுகளம் மற்றும் புனர்மைக்கப்பட்ட மேம்படுத் தப்பட்ட நவீன உடற்பயிற்சி கூடத் தினை பொதுமக்கள் பயன்பாட்டிற் காக திறந்து வைத்தனர்.

பின்னர், புனரமைக்கப்பட்ட உடற்பயிற்சி கூடத்தில் உடற்பயிற்சி இயந்திரம் மூலம் உடற்பயிற்சி செய் முறை பயிற்சியினை அமைச்சர் பார்வையிட்டார். தொடர்ந்து இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் மற்றும் மத்திய சென்னை நாடாளு மன்ற உறுப்பினர் ஆகியோர் புதி தாக கட்டப்பட்ட இறகு பந்து உள் விளை யாட்டு ஆடுகளத்தினை குத் துவிளக்கு ஏற்றி திறந்து வைத்து இறகு பந்து விளையாட்டினை தொடங்கி வைத்து பார்வையிட் டனர்.

பின்னர் கூடைப் பந்து ஆடுகளத் தில் பள்ளி மாணவிகளின் கூடைப் பந்து போட்டியினை இந்து சமயம் மற்றும் அறநிலைத்துறை அமைச் சர் தொடங்கி வைத்து கூடைப்பந்து போட்டியினை பார்வை யிட்டார். போட்டியில் வெற்றி பெற்ற மாணவி களுக்கு அமைச்சர் மற்றும் மத்திய சென்னை நாடாளு மன்ற உறுப்பி னர் கேடயம் வழங்கி பாராட்டுக் களை தெரி வித்தனர்.

இந்நிகழ்வின்போது, மேயர் திரு மதி ஆர்.பிரியா, வடக்கு வட்டாரத் துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் கள் எல்.தாஹா நவீன், வெ.பரிம ளம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.







தாம்பரம் மாநகர தி.மு.க. சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் பாரதி திடல் சண்முகம் சாலையில் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக பொருளாளர், கழக நாடாளுமன்ற மக்களவை குழுத்தலைவர் டி.ஆர்.பாலு.எம்.பி., தமிழ் கேள்வி ஊடக நிறுவனர் தி.செந்தில்வேல் சிறப்புரையாற்றினார்கள். இதில் தலைமை தீர்மான குழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம், மேயர் க.வசந்தகுமாரி, பரிதி இளம்சுருதி, டி.காமராஜ், எஸ்.இந்திரன், எஸ்.சேகர், இரா.சுரேஷ், ஆ.நடராஜன், வ.விஜயரங்கன், கழக பேச்சாளர் கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், சிட்லபாக்கம்.இ.மனோகரன், ரமணிஆதிமுலம், பி.ஜோதிகுமார், செ.சுரேஷ், சி.ஜெகன், எல்.பெரியநாயகம், சி.பரிமளா, இரா.விஜயகுமார், ஜா. ரவிகுமார், இரா.செல்வகுமார், ஆர்.செல்வகுமார், இரா.ரத்தினகுமார், திரளாக கலந்து கொண்டனர். பி.கே.ஏ.சத்யபிரபு நன்றி கூறினார்.